அனுப்புநர்

உறுப்பினர் செயலர்,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
எண்.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை-600 008.

பெறுநர்

ஆணையாளர்,
சென்னை மாநகராட்சி,
சென்னை-600 003.

கடித எண்.பி2/19399/2005, நாள்:13.10.2006.

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் - திட்ட அனுமதி - நில அளவை எண்.362/1சி1சி, டி.எஸ்.எண்-30, பிளாக் எண்-71, 150 அடி பைபாஸ் சாலை, வேளச்சேரி கிராமம், சென்னை-600 042 இல் வாகன நிறுத்தத்தளம் 4 தளங்கள் கொண்ட வணிகக்கட்டிடம் ஒப்பளிக்கப் பட்டிருப்பது - தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப்பிரிவு எண்.728/2005 இல் 25.7.2005 அன்று பெறப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள். 24.1.2006 & 20.4.2006.
3. திருத்திய வரைபடம் கிடைக்கப்பெற்ற நாள். 14.2.2006 & 4.7.2006.
4. இதே எண். கொண்ட இவ்வலுவலக கடித நாள். 18.9.2006.
5. விண்ணப்பதாரரின் கடித நாள்.27.9.2006.

*****

நில அளவை எண்.362/1சி1சி, டி.எஸ்.எண்.30, பிளாக் எண்-71, 150 அடி பைபாஸ் சாலை, வேளச்சேரி கிராமம், சென்னை-600 042 இல் வாகன நிறுத்தத்தளம் நான்கு தளங்கள் கொண்ட வணிக உபயோகம் கொண்ட கட்டிடத்தைக் கட்டுவதற்கு, பார்வை-1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் பார்வை -4இல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப் படுகிறது.

2. விண்ணப்பதாரர் பார்வை -இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு, ரசீது எண்.சி 14837 நாள்.27.9.2006 இல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | : | ரூ. 40,000/- |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | : | ரூ 1,000/- |
| வரன்முறைக் கட்டணம் | : | ரூ 20,000 /- |
| திறந்தவெளிக் கட்டணம் | : | ரூ.5,00,000/- |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | : | ரூ. 80,000/- |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | : | ரூ. 10,000/- |
| மொத்தம் | : | ரூ.6,51,000/- |

3. அ) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான கட்டணத்திற்கான, மேலாண்மை இயக்குநர், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்" என்ற பெயரில் எடுக்கப்பட்ட ரூ. 1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)-க்கான வரைவோலையை விண்ணப்பதாரர் தனது 27.9.2006 நாள் கடிதத்துடன் கொடுத்துள்ளார்.

ஆ) கழிவு நீரகற்று அமைப்பைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாகச் சமர்ப்பித்து, உரிய அனுமதியைப்

..2..

பெற்ற பின்தான், வேலைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இ) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிக்கவும் சமையலுக்காகவும் மட்டுமே நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகபட்சமாக 5 பேருக்கும், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டிடம் கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் கழிவு நீரகற்றுத்திட்டத்திற்கு ஒப்புதல் பெற்ற பிறகு, குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பிக்க வேண்டும். இணைப்பிற்கான அனுமதி கிடைத்தபின் தான் குழாய் அமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்துக் கிணறுகளும், மேல் நிலைத்தொட்டிகளும், கழிவுநீர்த்தொட்டிகளும், கொசுத்தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதாரமுறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழைநீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரை படத்திலிருந்தும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கும் மீறி செயலாகக் கருதப்படும் அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

5. என்.பி.சிறப்புக் கட்டிடம்/437/2006 நாள்.13.10.2006 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள்/வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 13.10.2006 இருந்து 12.10.09 வரை செல்லுபடியாகும்.

6. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத் தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பதாரர் சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகுதான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

7. கட்டிடம் கட்டுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரை படத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்துகொள்ளும்படியும், அவ்வாறில் லாமல். ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

உறுப்பினர் செயலருக்காக.

இணைப்பு: 1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:

1. திரு கிஷோர்குமார் கோகுல்தாஸ்,
என்-5, பிசாப் வாலர்ஸ் அவின்யு (கிழக்கு)
மைலாப்பூர், சென்னை-600 004.

2. உறுப்பினர்,
உரியதுறை ( Appropriate Authority)
108, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

3. வருமானவரி ஆணையர்,
168, உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

4. துணைத்திட்ட அமைப்பாளர்,
செயலாக்கப்பிரிவு,
செ.பெ.வ.குழுமம், சென்னை-8.

எஸ்டி/16/10.